1. வெண்பாவின் பொது இலக்கணம் பெற்றுத் தனிச்சொல் இன்றி நான்கடிகள் உடையதாய் வருவது?
அ) குறள் வெண்பா ஆ) நேரிசை வெண்பா இ) இன்னிசை வெண்பா ஈ) பஃறொடை வெண்பா

2. பொருத்துக.

| | | | | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|---|---|---|
| a) தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் | - 1) மின் | அ) | | 1 | 2 | 3 | 4 |
| b) தன்மை பன்மை வினைமுற்று விகுதிகள் | - 2) ஐ, ஆய் | ஆ) | | 4 | 3 | 2 | 1 |
| c) முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | - 3) அம், ஆம் | இ) | | 4 | 3 | 1 | 2 |
| d) ஏவல் பன்மை வினைமுற்று விகுதிகள் | - 4) என், ஏன் | ஈ) | | 3 | 4 | 2 | 1 |

3. அது வளைத்தலாகும் ? அ) உழிஞை ஆ) தும்பை இ) வஞ்சி ஈ) காஞ்சி
4. செங்கழுநீர் எந்த நிலத்திற்குரிய பூ ? அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்
5. பொருந்தாதது. அ) இளவேனில் ஆ) முதுவேனில் இ) பின்பனிக் காலம் ஈ) எற்பாடு
6. தவறானதைத் தேர்க.
அ) அடுக்குத்தொடர் விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் ஆகிய பொருள் காரணமாக வரும்.
ஆ) இரட்டைக் கிளவி அடைமொழியாய் குறிப்பு பொருளில் வரும்.
இ) இரட்டைக் கிளவி இசை, குறிப்பு, பண்பு பற்றி வரும்.
ஈ) செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு,மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது இரட்டைக் கிளவி எனப்படும்.
7. கதிர்வேல் வெற்றிலை தின்றான்
அ) ஒன்றொழி பொதுச்சொல் ஆ) இனங்குறித்தல்
இ) சினையாகு பெயர் ஈ) குறிப்பு வினைமுற்று
8. "படித்த படம்" இலக்கண குறிப்பு தருக.
அ) பெயரெச்சத் தொடர் ஆ) வினையெச்சத் தொடர் இ) வினைமுற்று ஈ) குறிப்பு பெயரெச்சம்
9. தொகை, தொகா நிலைத் தொடர் எத்தனை ? அ) 9, 6 ஆ) 6, 9 இ) 7, 9 ஈ) 9,7
10. கயல்விழி வந்தாள்.
அ) வேற்றுமைத் தொகை ஆ) விளித்தொடர் இ) பெயரெச்சத் தொடர் ஈ) அன்மொழித்தொகை
11. உம்மைத்தொகையின் படி சரியானதைத் தேர்க.
அ) கபிலபரணர் ஆ) சேரனும் சோழனும் இ) மலர்க்கை ஈ) யாவையும்
12. வேடர் கள்ளைச் "சொல்விளம்பி" என்பார்.
அ) தகுதி வழக்கு ஆ) இடக்கரடக்கல் இ) மங்கலம் ஈ) குழூ உக்குறி
13. பொருந்தாதது. அ) நகர்ப்புறம் ஆ) கால்வாய் இ) மூன்றில் ஈ) புற உலா
14. முட்டையிட்டது சேவலா? பெட்டையா?
அ) மரபு வழு ஆ) விடை வழு இ) வினா வழு ஈ) பால் வழு
15. பொருந்தாதது எது.
அ) உயர்ந்தோங்கி ஆ) குழிந்தாழ்ந்து இ) மீமிசை ஈ) மாநகர்
16. இது செய்வாயா? என்று வினவிய போது "உடம்பு நொந்தது" எனக் கூறுவது
அ) நேர் விடை ஆ) உற்றதுரைத்தல் விடை இ) உறுவது கூறல் விடை ஈ) இனமொழி விடை
17. விடை எத்தனை வகைப்படும்? அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9
18. எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியன எவை ? என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது
அ) அறி வினா ஆ) அறியா வினா இ) கொடை வினா ஈ) ஐய வினா
19. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லோ பிற சொற்களுடன் தொடர்ந்து நின்று வேறு பொருளையும் தருவது ------------
அ) தனி மொழி ஆ) தொடர் மொழி இ) கலவைத் தொடர் ஈ) பொது மொழி
20. பெயர்ச் சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வருவது ------------- எனப்படும்.
அ) சந்தி ஆ) சாரியை இ) விகாரம் ஈ) இடைநிலை
21. பகுபத உறுப்புகள் எத்தனை? அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8
22. பகாபதங்களாகவே இருப்பவை எவை?
அ) இடைச்சொல் ஆ) உரிச்சொல் இ) வினைச்சொல் ஈ) இடைச்சொல் & உரிச்சொல்
23. தவறானதைத் தேர்க.
அ) பல்முத்து ஆ) புருவவில் இ) பாதமலர் ஈ) தேன்தமிழ்
24. பொருந்தாதது எது? அ) போல ஆ) புரைய இ) இன்ன ஈ) மன்ன

25. படர்க்கை பெயரை முன்னிலை பெயராக்கி அழைக்க எந்த வேற்றுமை பயன்படுகிறது.
அ) முதல் வேற்றுமை ஆ) இரண்டாம் வேற்றுமை
இ) ஏழாம் வேற்றுமை ஈ) எட்டாம் வேற்றுமை
26. உரிமை பொருளில் வருவது
அ) ஐந்தாம் வேற்றுமை ஆ) ஆறாம் வேற்றுமை
இ) ஏழாம் வேற்றுமை ஈ) எட்டாம் வேற்றுமை
27. மூன்றாம் வேற்றுமை சொல்லுருபுகள் எவை?
அ) கொண்டு, உடன் ஆ) பொருட்டு, நிமித்தம் இ) நின்று, விட ஈ) உடைய
28. முதற்கருவி, துணைக்கருவி எங்கு பயன்படுத்தப்படுகிறது?
அ) முதல் வேற்றுமை ஆ) 2 ஆம் வேற்றுமை இ) 3 ஆம் வேற்றுமை ஈ) 4 ஆம் வேற்றுமை
29. வினையையும், பெயரையும், வினாவையும் பயனிலையாக கொண்டு முடிவது.
அ) முதல் வேற்றுமை ஆ) 2 ஆம் வேற்றுமை இ) 3 ஆம் வேற்றுமை ஈ) 4 ஆம் வேற்றுமை
30. "மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே" இவற்றில் இடம் பெற்றுள்ள பொருள்கோள்?
அ) தாப்பிசை பொருள்கோள் ஆ) விற்பூட்டு பொருள்கோள்
இ) அடிமறிமாற்று பொருள்கோள் ஈ) கொண்டுகூட்டு பொருள்கோள்
31. பாம்பு புற்றில் தலை வைத்து நுழையும் போது, தலை மேலாகவும், உடல் அடுத்தும் செல்வதுபோலச் செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக் கூட்டிப் பொருள் கொள்வது.
அ) அளைமறிபாப்புப் பொருள்கோள் ஆ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
இ) தாப்பிசைப் பொருள்கோள் ஈ) கொண்டுகூட்டுப் பொருள்கோள்
32. " இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை" --- இவற்றில் பயின்று வரும் பொருள்கோள் எது?
அ) அளைமறிபாப்புப் பொருள்கோள் ஆ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
இ) தாப்பிசைப் பொருள்கோள் ஈ) கொண்டுகூட்டுப் பொருள்கோள்
33. பொருள்கோள் எத்தனை வகைப்படும்? அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9
34. "நன்னூல் கற்றேன்" அ) கருவியாகு பெயர் ஆ) காரியவாகு பெயர்
இ) கருத்தாவாகு பெயர் ஈ) உவமயாகு பெயர்
35. தவறானதைத் தேர்க.
அ) ஒன்று கொடு, நான்கு கிலோ தா, இரண்டு லிட்டர் தேவை என்பன போல வரும் அளவுத் தொடர்கள் ஆகுபெயராகும்.
ஆ) ஒரு மாம்பழம் கொடு, இரண்டு கிலோ நெய் வேண்டும் என்பன ஆகுபெயராகா.
இ) இடம், பொருளுக்கு ஆகி வருவது இடவாகுபெயராகும்
ஈ) பொருள், இடத்திற்கு ஆகி வருவது இடவாகு பெயராகும்
36. வெள்ளையை ஏறில் பூட்டு
அ) தொழிலாகு பெயர் ஆ) பண்பாகு பெயர் இ) சினையாகு பெயர் ஈ) காலவாகு பெயர்
37. மல்லிகை சூடினாள்
அ) சினையாகு பெயர் ஆ) முதலாகு பெயர் இ) குணவாகு பெயர் ஈ) காலவாகு பெயர்
38. தென்னை அ) இடுகுறிப்பெயர் ஆ) காரணப்பெயர் இ) இடுகுறி சிறப்புப்பெயர் ஈ) ஏதுமில்லை
39. பொருந்தாதது. அ) கேணி ஆ) ஜமக்காளம் இ) அல்வா ஈ) கமலம்
40. விளித்தான் என்பது அ) இயற்சொல் ஆ) வினை இயற்சொல் இ) திரிசொல் ஈ) வினை திரிசொல்
41. தவறானதைத் தேர்க. அ) சால ஆ) உறு இ) நளி ஈ) களி
42. "வந்தாலும் வருவானடி" அ) எதிர்மறை உம்மை ஆ) சிறப்பு உம்மை
இ) ஐயவும்மை ஈ) எச்சவும்மை
43. முற்றியலுகரம் எத்தனை மாத்திரைகளை பெற்று வரும் அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4
44."ஐ" காரத்திற்கும், "ஔ"காரத்திற்கும் இன எழுத்தாக வருவது அ) ப்,வ் ஆ) இ,உ இ) த்,ட் ஈ) ய்,வ்
45. தவறானது எது? அ) எங்ஙி ஆ) வெ:::குவார்க் இ) சங்ஙு ஈ) வாழ்க்கை
46. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அ) 5 ஆ) 6 இ) 8 ஈ) 9
47. பொருந்தாதது எது? அ) பசு ஆ) காசு இ) நாகு ஈ) ஆடு
48. பொருந்தாதது எது? அ) சங்கு ஆ) மஞ்சு இ) நண்டு ஈ) கொய்து

49. "கேண்மியா" அ) குற்றியலுகரம் ஆ) குற்றியலிகரம் இ) முற்றியலுகரம் ஈ) முற்றியலிகரம்
50. நிலைமொழியிலுள்ள "ல" கர "ள" கரங்கள் "த" கரத்தோடு புணரும் போது -------- திரியும்
அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஆய்தகுறுக்கம் இ) ஆய்தம் ஈ) குற்றியலிகரம்
51. செய்யுளின் உறுப்புகள் எத்தனை? அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8
52. ஆசிரிய உரிச்சீர் என்று எதனை அழைப்பர்?
அ) ஓரசைச்சீர் ஆ) ஈரசைச்சீர் இ) மூவசைச்சீர் ஈ) நாலசைச்சீர்
53. நின்ற சீரின் ஈற்றசையும், வரும் சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது ------------
அ) எழுத்து ஆ) அசை இ) சீர் ஈ) தளை
54. "அகர முதல" அ) நேரொன்றாசியத்தளை ஆ) நிரையொன்றாசிரியத்தளை
இ) இயற்சீர் வெண்டளை ஈ) வெண்சீர் வெண்டளை
55. பாவின் ஓசையின்பத்திற்கும், சிறப்பிற்கும் ----------------- வேண்டுவதாகும்.
அ) தளை ஆ) தொடை இ) எதுகை ஈ) அசை
56. தொடை விகற்பம் எத்தனை வகைப்படும்? அ) 25 ஆ) 30 இ) 35 ஈ) 40
57. ஒரூஉ, முற்று, கீழ்கதுவாய்
அ) 1,4 : 1,2,3,4 : 1,2,4 ஆ) 1,3 : 1,3,4 : 1,2,3,4 இ) 1,3 : 1,2,3 : 1,3,4 ஈ) 1,2 : 1,3 : 1,4
58. தவறானதைத் தேர்க.
அ) ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது - வெண்பா
ஆ) வெண்பா ஆறு வகைப்படும்
இ) வெண்பா அகவலோசைப் பெற்றுவரும்
ஈ) ஆசிரியப்பா ஏகாரத்தில் முடிவது சிறப்பு
59. வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, தனிச்சொல் இன்றி 4 அடிகளை கொண்டதாய் வருவது
அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) ஆசிரியப்பா இ) நேரிசை வெண்பா ஈ) இன்னிசை வெண்பா
60. பஃறொடை வெண்பா எத்தனை அடிகளாய் கொண்டதாய் வரும்?
அ) 2 அடி முதல் 12 அடி வரை ஆ) 5 அடி முதல் 12 அடி வரை
இ) 2 அடி முதல் 10 அடி வரை ஈ) 5 அடி முதல் 10 அடி வரை
61. "அறிந்தானை ஏத்தி அறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செல்வ னுரைப்ப - சிறந்தார்
சிறந்தமை ஆராய்ந்து கொண்டு" இந்த வரியுடன் தொடர்புடையது?
அ) நேரிசை சிந்தியல் வெண்பா ஆ) இன்னிசை சிந்தியல் வெண்பா
இ) பஃறொடை வெண்பா ஈ) நேரிசை வெண்பா
62. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளும் நாற்சீர் அடிகளாக வருவது -------
அ) இணைக்குறளாசிரியப்பா ஆ) நிலைமண்டில ஆசிரியப்பா
இ) அடிமறிமண்டில ஆசிரியப்பா இ) நேரிசை ஆசிரியப்பா
63. உடம்படுமெய் எவை? அ) ப்,வ் ஆ) வ்,ய் இ) த்,ட் ஈ) ம்,வ்
64. ஓரெழுத்து சொல்லில் மட்டும் ----------- வெளிப்படையாக தெரியும்
அ) மெய்யீறு ஆ) ஆய்தம் இ) மெய் ஈ) உயிரீறு
65. தவறானதைத் தேர்க.
அ) தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும்.
ஆ) நிலைமொழியின் ஈற்று முற்றியலுகரமாகவும், வருமொழியின் முதலெழுத்து உயிர் எழுத்தாக இருப்பின் குற்றியலிகர புணர்ச்சியை போல புணரும்.
இ) டகரம்(ட்) ஊர்ந்து வரும் நெடில்தொடர் குற்றியலுகரம், றகரம்(ற்) ஊர்ந்து வரும் உயிர்தொடர் குற்றியலுகரம் வருமொழியோடு இணையும் போது, அவை ஊர்ந்து வரும் ஒற்று இரட்டும்.
ஈ) மெல்லினத் தொடர் குற்றியலுகரங்கள் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான வல்லின தொடராய் முடியும்.
66. சரியானதைத் தேர்க.
அ) மருந்து + பை = மருந்துப்பை ஆ) இரும்பு + ஆணி = இரும்பாணி
இ) கரும்பு + வில் = கரும்புவில் ஈ) செம்பு + குடம் = செப்புக்குடம்
67. "சாரைப்பாம்பு" இலக்கணக்குறிப்பு தருக.
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) இருபெயரொட்டு பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை

68. பொருந்தாதைத் தேர்க.
அ) இரண்டாம் வேற்றுமை "ஐ" விரியில் வல்லினம் மிகாது.
ஆ) ஆறாம் வேற்றுமை தொகையில் வல்லினம் மிகாது.
இ) எழுவாய் தொடரில் வல்லினம் மிகும்.
ஈ) வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

69. உவமை, உவமேயம் இவ்விரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படுமாறு வருவது ------------------
அ) உவமையணி ஆ) எ.கா.உவமையணி இ) உருவக அணி ஈ) ஏகதேச உருவக அணி

70. " பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்" இவற்றில் எந்த அணி பயின்று வந்துள்ளது.
அ) வேற்றுமையணி ஆ) இல்பொருளுவமையணி
இ) பிறிதுமொழிதல் அணி ஈ) ஏகதேச உருவக அணி

71 சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, நேரே பொருள் கொள்வது -----------
அ) வேற்றுமையணி ஆ) வஞ்சப்புகழ்ச்சியணி இ) நிரல்நிரையணி ஈ) உவமையணி

72. பாம்பு, எள் இவை இரண்டும் எதற்கு எடுத்துக்காட்டாக கூறப்பட்டுள்ளது.
அ) இரட்டுறமொழிதல் அணி ஆ) செம்மொழிசிலேடை
இ) பிரிமொழிச் சிலேடை ஈ) ஏகதேச உருவக அணி

73. சொல் இலக்கண, இலக்கிய வகை எத்தனை?
அ) 4,4 ஆ) 4,3 இ) 3,4 ஈ) 3,3

74. "நோக்கம்" இலக்கண குறிப்பு தருக.
அ) பண்புப்பெயர் ஆ) தொழிற்பெயர் இ) பொருட்பெயர் ஈ) காலப்பெயர்

75. கபிலனுக்கு அடி விழுந்தது
அ) முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆ) முதனிலைத் தொழிற்பெயர்
இ) வினையாலணையும் பெயர் ஈ) அன்மொழித்தொகை

76. "பெற்றானை" இலக்கண குறிப்பு தருக.
அ) முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆ) முதனிலைத் தொழிற்பெயர்
இ) வினையாலணையும் பெயர் ஈ) அன்மொழித்தொகை

77. தொழில் செய்பவருக்கு பெயராய் வரும், மூவிடங்களிலும் வரும், முக்காலத்தையும் காட்டும்.
அ) தொழிற்பெயர் ஆ) வினையாலணையும் பெயர் இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

78. "எல்லாம்" என்பது
அ) மூவிட ஒருமை பொதுப்பெயர் ஆ) மூவிடப் பன்மை பொதுப்பெயர்
இ) படர்க்கை ஒருமை ஈ) படர்க்கை பன்மை

79. "அறியாமை" இலக்கணகுறிப்பு
அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம் இ) தொழிற்பெயர் ஈ) எதிர்மறை தொழிற்பெயர்

80. "என்னை" என்பது எவ்வாறு பிரியும்
அ) யான் + ஐ ஆ) என் + ஐ இ) எம் + ஐ ஈ) யன் + ஐ

81. நும், உம் என்பது எந்த இடத்தில் வேற்றுமை உருபேற்கும் போது திரியும்
அ) முன்னிலை ஒருமை ஆ) முன்னிலை பன்மை இ) படர்க்கை ஒருமை ஈ) படர்க்கை பன்மை

82. எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் ------------------
அ) பெயர்ச்சொற்கள் ஆ) வினைச்சொற்கள் இ) எழுவாய்த் தொடர்கள் ஈ) விளித்தொடர்

83. ------------ எழுவாய்க்கு பயனிலையாய் அமையும், முக்காலங்கலளில் ஒன்றை உணர்த்தும், திணை,பால்,எண்,இடம் ஆகியவற்றைக் காட்டும்
அ) வினையெச்சம் ஆ) வினையாலணையும் பெயர் இ) தொழிற்பெயர் ஈ) வினைமுற்று

84. "உழவன் நடையன்" இலக்கணக்குறிப்பு தருக.
அ) வினைமுற்று ஆ) குறிப்பு வினைமுற்று இ) தெரிநிலை வினைமுற்று ஈ) முற்றுவினை

85. --------- முன்னிலையில் மட்டும் வரும். எதிர்காலம் காட்டும். ஒருமை பன்மைகளில் தனித்தனியாக வரும்
அ) ஏவல் வினைமுற்று ஆ) ஏவல் பன்மை வினைமுற்று
இ) ஏவல் ஒருமை வினைமுற்று ஈ) வியங்கோள் வினைமுற்று

86. முக்காலத்திற்கும் உரிய பெயரெச்ச வாய்ப்பாடுகள் எது?
அ) கிறு,கின்று,ஆனின்று ஆ) செய்த,செய்கின்ற,செய்யும் இ) க,இய,இயர் ஈ) அல்,இல்,அன்



SANTHANA TNPSC
www.Padasalai.Net

87. செய்பு என்னும் வாய்ப்பாட்டின் வினையெச்சம் ---- என முடியும்.
அ) து ஆ) பு இ) கு ஈ) று

88. படித்துத் தேரினான்.
அ) குறிப்பு வினையெச்சம் ஆ) குறிப்பு வினைமுற்று
இ) குறிப்பு பெயரெச்சம் ஈ) தெரிநிலை வினையெச்சம்

89. முருகன் படித்தனன் தேறினான்.
அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினைமுற்று

90. இடைச்சொற்களாக வருபவைகளில் தவறானது எது?
அ) வேற்றுமை உருபு ஆ) உவம உருபு இ) அசை ஈ) சீர்

91. “ஏ” என்ற இடைச்சொல் ----------- ஆறு பொருள்களில் வரும்.
அ) 4 ஆ) 5 இ) 6 ஈ) 7

92. “ஓ” என்ற இடைச்சொல் ---------- பொருள்களில் வரும்.
அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9

93. பலரிடமிருந்தோ, பலவற்றிடமிருந்தோ ஒருவரை அல்லது ஒன்றனைப் பிரித்து காட்ட வருவது.
அ) அசை நிலை ஓகாரம் ஆ) அசைநிலை ஏகாரம்
இ) பிரிநிலை ஓகாரம் ஈ) பிரிநிலை ஏகாரம்

94. தேவர்க்கும் மேலாய தேசிகன்
அ) சிறப்பும்மை ஆ) எதிர்மறை உம்மை இ) முற்றும்மை ஈ) உயர்வு சிறப்பும்மை

95. காடும் மலையும் கடலும் வயலும்
அ) முற்றும்மை ஆ) எண்ணும்மை இ) ஆக்கவும்மை ஈ) உம்மைத்தொகை

96. பொருந்தாதது எது?
அ) சால ஆ) உறு இ) நனி ஈ) கடி

97. உரிச்சொல், பெயருக்கும் வினைக்கும் அடிப்படையாக விளங்கும் வேர்ச்சொல்லே என இக்கால அறிஞர் பலரும் கருதுகின்றனர். (இவரின் கருத்தை ஒட்டி)
அ) திருவள்ளுவர் ஆ) தெய்வச்சிலையார் இ) தொல்காப்பியர் ஈ) வீரமாமுனிவர்

98. தமிழ்நாட்டைச் சூழ்ந்துள்ள பிற பகுதிகளிலிருந்து பெறப்பட்ட சொற்கள் அதே பொருளில் நாம் பயன்படுத்துவது ------------- எனப்படும்.
அ) வடசொல் ஆ) திசைச்சொல் இ) திரிச்சொல் ஈ) இயற்சொல்

99. காரணச்சிறப்பு பெயர் எது?
அ) காகம் ஆ) வாழை இ) கோழி ஈ) வளையல்

100. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?
அ) 8 ஆ) 10 இ) 12 ஈ) 16

SANTHANA TNPSC
www.Padasalai.Net